# வாய்ப்புக்களைக் கட்டியெழுப்புதல், எமது எதிர்காலத்தைப் பாதுகாத்தல்

2014 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்

Ontario

# 2014 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டம்

## அதிக வேலைவாய்ப்புக்கள்
## அதிக வாய்ப்பு
## அதிக பாதுகாப்பானதோர் எதிர்காலம்

கொண்ட ஒரு வலுமிக்க ஒன்ராறியோவுக்கான ஒரு திட்டத்திற்கு அடித்தளமிடுகிறது



மக்களில் முதலீடு செய்தல், நவீன உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்புதல், சக்தி வாய்ந்ததும் புதுமையானதுமான ஒரு வணிக சூழலுக்கு ஆதரவளித்தல் என்பனவூடாக, இத்திட்டமானது பொருளாதாரத்தை வளர்த்து, வேலை வாய்ப்புக்களை உருவாக்கும்.

2013-14கால, பற்றாக்குறையானது 11.3 பில்லியன் டொலராக இப்போது கணிப்பிடப்பட்டுள்ளது – 2013 வரவுசெலவுத் திட்ட முன்கணிப்பீட்டுடன் ஒப்பிடும்போது ஒரு 0.4 பில்லியன் டொலர் முன்னேற்றம். முன்கணிப்பீட்டை விடக் குறைவான உத்தேச பற்றாக்குறையை, தொடர்ந்து ஐந்தாவது வருடமாக மாகாணம் அறிவிப்பதனை இது சுட்டுகிறது. 2017-18 அளவில் வரவுசெலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது.

2014 வரவுசெலவுத் திட்டம் ஒன்ராறியோ மக்களால், ஒன்ராறியோ மக்களுக்கானது.

# வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்



10 வருட பொருளாதாரத் திட்டமானது, பின்வருவன உட்பட, ஒன்ராறியோவாசிகளுக்கு புதிய தொழில்களையும் கூடுதலான ஊதிய வேலைவாய்ப்புகளையும் நோக்கி நகரும் சந்தர்ப்பங்களை அளிப்பதன் மூலம், ஒன்ராறியோ ஒரு பூகோள வலுவகமாக வடிவெடுப்பதற்கான கருவிகளை வழங்குகிறது:

- முதலீடுகளைக் கவர்ந்து, ஒன்ராறியோவின் மூலோபாயத் துறைகளை வலுப்படுத்தி, மாகாணத்தின் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், வணிகங்களுடன் பங்குதாரராவதற்கென, புதிய 10 வருட, 2.5 பில்லியன் டொலர் வேலைவாய்ப்பு, செழுமை நிதியம் (Jobs and Prosperity Fund) ஒன்றை உருவாக்குதல்.
- சக்தியைப் பாதுகாக்கவும், செலவினங்களை நிர்வகிக்கவும், பணத்தைச் சேமிக்கவும் என, சிறு வணிகங்களுக்குத் தேவைப்படும் கருவிகளை வழங்குதல்.
- பெரும் வணிகங்களின் மின்சாரச் செலவினங்களுக்கு உதவுதல்.
- பல சிறிய, நடுத்தர வணிகங்கள் வளரவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவும் வகையில், வேகவளர்ச்சியுடன் தலைதூக்கிவரும் சந்தைகளை ஒன்ராறியோவின் ஏற்றுமதிகள் எட்டுவதை விரிவாகுதல்.

# போக்குவரத்திலும் உட்கட்டமைப்பிலும் முதலீடு செய்தல்




சகலவித உட்கட்டமைப்புக்கான குறிப்பிடத்தக்க (Demand) ஒன்ராறியோவின் உத்தேச சனத்தொகை வளர்ச்சி விளைவிக்கும். அதனாலேயே பின்வருவன உட்பட, அடுத்த 10 வருடங்களில் மாகாணமானது 130 பில்லியன் டொலருக்கு மேலாக, பொது உட்கட்டமைப்பில் முதலீடு செய்யத் திட்டமிடுகிறது:

- அடுத்த 10 ஆண்டுகளுக்கு முழு மாகாணத்தின் போக்குவரத்து உட்கட்டமைப்புக்கென ஏறக்குறைய 29 பில்லியன் டொலர் கிடைக்கக்கூடியதாக நிதியை அர்ப்பணிக்கிறது.
- முழு மாகாணத்தின் பெருந்தெருப் புனரமைப்புக்கும் விரிவாக்கல் திட்டங்களுக்குமென 2014-15இல் மொத்தம் 2.5 பில்லியன் டொலரை முதலீடு செய்கிறது.
- ஒரு புதிய நிரந்தர 100 மில்லியன் டொலர் நிதியினூடாக, நகராட்சி வீதிகள், பாலங்களை ஆதரித்தல்.

# ஒன்ராறியோ வாசிகளின் பணி ஓய்வைப் பாதுகாத்தல்



கனடா ஓய்வூதியத் திட்டம் + முதுவயதுப் பாதுகாப்பு + தனிப்பட்ட சேமிப்புக்கள்



+ ஒன்ராறியோ பணி ஓய்வு ஓய்வூதியத் திட்டம்

ஒன்ராறியோ வாசிகளுக்கு உதவுதற்கென, விசேடமாக நடுத்தர வருமானம் ஈட்டுவோர் தமது பணி ஓய்வின்போது கூடுதலான பாதுகாப்பைப் பெறவென, 2014 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டமானது கனடா ஓய்வூதியத் திட்டத்தின்மீது (CPP) கட்டியெழுப்பும் முதல் வகையான மாகாண ஓய்வூதியத் திட்டத்தைப் பிரேரிக்கிறது.

ஒரு CPP மேம்படுத்தலானது, பணியிலிருக்கும் சகல கனடியர்களுக்கும் கூடுதல் பாதுகாப்பான பணி ஓய்வை வழங்கும் அதேவேளை, பொருளாதாரத்தை வளர்த்தல், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பன ஊடாக, நீண்டகால பொருளாதார பலாபலன்களைக் கொண்டிருக்கும். CPP மேம்பாடு பற்றிய கலந்துரையாடல்களை தடுக்க கனடிய அரசு முடிவெடுத்துள்ள நிலையில், ஒன்ராறியோ பணி ஓய்வு ஓய்வூதியத் திட்டம் (ORPP) எனும் - ”ஒன்ராறியோவில் உருவாக்கப்பட்ட” தீர்வு ஒன்றை ஒன்ராறியோ அரசு உருவாக்கும்.

ORPP ஆனது:

- பணவீக்கத்தைக் கருத்தில் கொண்டதும் வாழ்நாள் பூராவும் வழங்கப்படுவதுமான, உத்தேசிக்கப்படக்கூடிய ஒரு மாதாந்த அனுகூலக் கொடுப்பனவு உட்பட, CPPபிரதான பண்புகளினைக் கட்டியெழுப்பும்.
- பங்களிப்பு வீதத்தைக் குறைவாகக் கடைப்பிடித்து, பணி ஓய்வுச் சேமிப்புகளை அதிகரிக்கும்.
- பெருந்தொகை வேலை வழங்குநர்களுடனும், ஈராண்டுகளுக்குக் கட்டமிடப்பட்ட பங்களிப்புகளுடனும் ஆரம்பிக்கும் வகையில் 2017இல் அறிமுகமாகும்.
- CPPயினால் தற்போது உள்ளடக்கப்படுவதற்கும் மேலாக, உள்ளடக்கப்படும் ஊதிய மட்டத்தை அதிகரிக்கும்.

## மின்வலுச் செலவினங்களைக் குறைத்தல்

அரசாங்கம் ஒன்ராறியோ வாசிகளுக்கு, பின்வருவன உட்பட, அவர்களது மின்வலுச் செலவினங்களில் உதவுகிறது:

- மக்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குச் செலுத்தியிருக்கக்கூடிய சுமார் 520 டொலரை குறைத்து, கடந்த 18 மாதங்களுக்கு, அமைப்புமுறையில் செலவினங்களை குறைத்தல்
- வதிவிட பாவனையாளர்களது மின்சாரக் கொடுக்குமதியிலிருந்து கடன் பணி ஓய்வுக் கட்டண (Debt Retirement Charge) செலவினத்தை மார்கழி 31, 2015க்குப் பின்னர் அகற்றப் பிரேரித்தல். இது ஒரு வகைமாதிரி வதிவிட வீதம் செலுத்துனருக்கு வருடாந்தம் சுமார் 70 டொலர் சேமிப்பு.

## ஒரு நியாயமான சமுதாயத்தை வளர்த்தல்

சகல ஒன்ராறியோ வாசிகளுக்கும் வாய்ப்பினை வழங்க உதவுவதற்கான அரசாங்கத்தின் முன்னெடுப்புகளாவன:

- ஒன்ராறியோ சிறுவர்நலக் கொடுப்பனவை (Ontario Child Benefit) அதிகரித்து, சுட்டியிடப் பிரேரித்தல்.
- வீத அதிகரிப்பு ஒன்றினூடாகவும், வேலைநலக் கொடுப்பனவை ஒழுங்கமைப்பதனூடாகவும் சமூகவுதவி அமைப்பு முறையைத்தொடர்ந்து புனரமைத்தல்.
- குறைந்த வருமான சுற்றுச் சூழலிலும் பூர்வீகக் குடியிருப்புகளிலும் உள்ள அதிக சிறுவர்களுக்குச் சேவையாற்றும் வகையில் மாணவர் சத்துணவுத் திட்டத்தை (Student Nutrition Program) விரிவுபடுத்தல்.
- குறைந்த வருமான பணியாட்களுக்கு நியாயத்தையும் வணிகங்களுக்கு முன்னுணர்வையும் வழங்கவென, ஆகக் குறந்த ஊதியத்தை 11 டொலராக உயர்த்தி, அதனைப் பணவீக்கத்துடன் பிணைக்கப் பிரேரித்தல்.
- வயதுவந்த மாற்றுத் திறனாளிகளுக்கும், சமூக சேவைகள் துறைசார் முன்னணிப் பணியாளர்களுக்குமான ஆதரவை மேம்படுத்தல்.
- பொதுநிதிய இல்லங்களிலும் சமூகப் பராமரிப்புத் துறையிலும் உள்ள தனியாள் ஆதரவுப் பணியாட்களுக்கும் (PSW), முன்னணி குழந்தை பராமரிப்புப் பணியாட்களுக்குமான ஊதியத்தை உயர்த்தி ஆதரவு வழங்குதல்.

## ஃபெடரல் அரசிடமிருந்து நியாயத்தை வினவுதல்

ஒவ்வொரு வருடமும் அரசு ஒன்ராறியோவிலிருந்து பெறும் வருமானமானது, அங்கு செலவிடும் தொகையைவிட அதிகமானதாகும். இது ஒன்ராறியோவாசிகள் அரசிடமிருந்து பெறுவதற்கும் கொடுப்பதற்கும் இடையே 11 பில்லியன் டொலர் இடைவெளியை ஏற்படுத்துகிறது.

ஒன்ராறியோ அரசாங்கம் ஃபெடரல் அரசிடமிருந்து பின்வருவனவற்றைக் கோருகிறது:

- ஏனைய மாகாணங்களின் குடியிருப்பாளர்கள் போன்றே ஒன்ராறியோவாசிகளையும் நடத்துக.
- கடந்த காலங்களில் ஏனைய மாகாணங்களில் செய்ததை போன்று, 2014 – 15இல் பிரதான நிதிமாற்றீட்டில் ஏற்பட்ட 641 மில்லியன் டொலர் வீழ்ச்சியிலிருந்து ஒன்ராறியோவைக் காப்பாற்றுக.
- Ring of Fire நிகழ்ச்சித் திட்ட உட்கட்டமைப்புக்கென ஒன்ராறியோ உத்தரவாதமளித்துள்ள 1 பில்லியன் டொலாருடன் பொருந்துதலுட்பட, உட்கட்டமைப்புக்கான நிதியளிப்பைக் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்குக.

## பொறுப்புடன் நிர்வகித்தல்

மாகாணங்களுக்கிடையில் ஒன்ராறியோவே உயர்தரப் பொதுச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கிவரும் நிலையிலும், ஆகக் குறைந்த தனியாள் திட்டச் செலவினத்தைக் கொண்டது. கழிவுகளைக் களைகிறது; முன்னுரிமைகளில் குறியாய் இருக்கிறது; செலவிடப்படும் ஒவ்வொரு டொலரும் முக்கியம் என்பதை உறுதி செய்கிறது.

அரசாங்கமானது முன்னேறியவாறு, பின்வருவானவற்றைச் செய்யும்:

- 2014-15இல் 250 மில்லியன், 2015-16 மற்றும் 2016-17இல் தலா 500 மில்லியன் டொலர் சேமிப்பு இலக்கினை மீள்நோக்கவென ஒரு வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்யும்.
- வரவுசெலவுத் திட்டம் சமநிலையை எட்டும்வரை, மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வை முடக்கி வைக்குமாறு தொடர்ந்து குரலெழுப்பும்.
- பரந்த பொதுத்துறைகளின் சிரேஷ்ட நிர்வாகிகளின் நஷ்ட ஈட்டை நேரடியாகக் கட்டுப்படுத்தி, அதனைச் சட்ட வழிமுறைகளுக்குள்ளாக்கும்.
- நிகழ்ச்சித் திட்டச் செலவினங்களுக்கான சராசரி வருடாந்த வளர்ச்சியை மூன்று வருடங்களுக்கு 1.1 சதவீதமாக நிறுத்தி வைக்கும்.

# 2014

# ஒன்ராறியோ
# வரவுசெலவுத் திட்டம்

மேலும் இதில் அறிக

ONTARIO.CA/BUDGET

கட்டணமற்ற தொ.பே: 1-800-337-7222

செவிப்புலன் குறைபாடுள்ளோர் தொ.பே: 1-800-263-7776

© Queen’s Printer for Ontario, 2014